# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

## *2014 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, நகர சபைகள் (திருத்தச்) சட்டம்*

*(2014 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

*2014, ஒற்றோபர் மாதம் 24 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 20.00**

## *2014 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, நகர சபைகள் (திருத்தச்) சட்டம்*

[*2014 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ.ஓ. 3 /2014*

### *(255 ஆம் அத்தியாயமான) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-*

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.*

***1.** இச்சட்டம், 2014 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, நகர சபைகள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.*

*(255 ஆம் அத்தியாயமான) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தில் 178ஆ என்னும் பிரிவை உட்புகுத்துதல்.*

***2.** (255 ஆம் அத்தியாயமான) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 178அ என்னும் பிரிவை உடனடுத்துப்பின்னர் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், அது அக்கட்டளைச்சட்டத்தின் 178ஆ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-*

*"நிலைபெயர் கால ஏற்பாடு.*

*178ஆ. 2012 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான நகரசபைகள் கட்டளைச்சட்டத்தின் 178அ என்னும் பிரிவுக்கான காப்புவாசகத்தின் ஏற்பாடுகள், முறையே, 2012ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் மற்றும் 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு முன்னர் நடாத்தப்பட்ட தேர்தல்களின் முடிவுகளின் நியதிகளின்படி அமைத்துருவாக்கப்பட்ட ஒரு*

நகரசபைக்குச் சமர்ப்பிக்கப்படவுள்ள ஏதேனும் வரவுசெலவுத் திட்டத்துக்கு அல்லது குறைநிரப்பு வரவுசெலவுத் திட்டத்துக்கு ஏற்புடையனவாதலாகாது.".

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்